**C.C. No.4/2025**

**Deposition of P.W. 2**

**Dated : 3.02.2026**

**Name : மணிகண்டன்**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

29.12.2022 நான் எந்தெந்த பகுதியில் பணியில் இருந்தேன் என்றால் சிவகாமிபுரம் பீட் பகுதியில் பணியில் இருந்தேன். அன்றைய தினம் எனக்கு 3.30 மணியளவில் உதவி வன பாதுகாவலர் வேட்டை நடப்பதாக தகவல் கூறினார். நான் யாருக்கு தகவல் கொடுத்தேன் என்றால் வனக்காப்பாளர் சங்கரபாண்டியனுக்கு தகவல் அளித்தேன். சம்பவ இடத்திற்கு நாங்கள் அனைவரும் சேர்ந்து தான் சென்றோம். வேட்டை தடுபபு காவலர்கள் எந்த பகுதியில் பணியில் இருந்தார்கள் என்றால் பணக்குடி பகுதியில் பணியில் இருந்தார்கள். உப்பு ஓடை எந்த திசையை நோக்கி செல்கிறது என்றால் கிழக்கிலிருந்து மேற்கு. குட்டிக்குளத்தின் எந்த திசைபகுதியில் நான் எதிரிகளை பார்த்தேன் என்றால் ஓடையின் தெற்கு புறம் பார்த்தேன். நான் பார்த்த இடத்திலிருந்து எதிரிகள் உடும்பை எவ்வளவு தொலைவில் வேட்டையாடியதாக சொன்னார்கள் என்றால் குளத்திற்கு அருகே உள்ள பகுதி என சொன்னார்கள். அருகே உள்ள பகுதியை நான்

பார்வையிட்டதாக எந்த ஒரு ஆவணத்திலும் துலங்காது என்றால் ஞாபகம் இல்லை. 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் யாருக்கு சொந்தமான பனைதோப்பில் எதிரிகள் பனை ஏறுவதற்கு சென்றதாக அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் யாருகக்கு சொந்தமானது என சொல்லவில்லை. எதிரிகள் சமைப்பதற்காக அடுப்பு தயார் செய்து வைத்திருந்தார்கள். அந்த இடத்தில் மசாலா பொருட்கள் இருநததா என்றால் இல்லை பாத்திரங்கள் மட்டும் இருந்தது. தீப்பெட்டி கைப்பற்றினேனா என்றால் இல்லை ஆனால் தீப்பெட்டி இருந்தது. அடுப்பு தயார் செய்யப்பட்டதாகவோ தீப்பெட்டி இருந்ததாகவோ நான் கையொப்பம் செய்த எந்த ஆவணத்திலும் இல்லை என்றால் ஞாபகம் இல்லை. சட்டியில் எத்தனை துண்டுகள் இருந்தது என்று எண்ணவில்லை. 1ம் எதிரி குட்டிக்குளம் பகுதியிலிருந்து வடக்கு திசை நோக்கி ஓடினார். முதல் விசாரணையில் நான் சிவகாமிபுரம் பீட்டில் பணியில் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் சுமார் 1 மணிநேரம் இருந்தேன். எதிரிகளுடன் வனச்சரக அலுவலகத்திற்கு சுமார் 6 மணியளவில் வந்துசேர்ந்தோம். மாவட்ட வன அலுவலர் என்னை விசாரித்தாரா என்றால் இல்லை. கைது செய்த இடத்தை சுற்றி தனியாருக்கு சொந்தமான விவசாய நிலங்கள் உள்ளது

என்றால் சரிதான். அப்பகுதியில் மேய்ச்சல் நடைபெறுவது வழக்கம் என்றால் இல்லை. சம்பவ இடத்தில் தனிநபர்கள் யாரையும் விசாரித்தோமா என்றால் இல்லை. வேட்டை தடுப்பு காவலர்களுக்கு வனக்காப்பாளர் தகவல் அளித்தார். வேட்டை தடுபபு காவலர் ஜெகன் என்பவர் காந்தி மேலத்தெரு சிவகாமிபுரம் பகுதியை சேர்ந்தவர் என்றால் சரிதான். வழக்கின் எதிரிகள் இருவரும் காந்தி மேலத்தெருவை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். ஜெகன் என்பவருக்கும் எதிரிகளுக்கும் உள்ள முன்விரோதத்தின் காரணமாக உதவி வனக்காப்பாளருககு பொய்யாக தகவல் அளித்து எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. கைப்பற்றப் பட்ட மாமிசம் ஆய்வகத்திற்கு அனுப்பப்படவில்லை என்றரால் சரிதான். நான் சம்பவ தினத்தன்று சிவகாமிபுரம் பீட் பகுதியில் பணியில் இல்லை என்றும் வழக்கின் எதிரிகளுக்கும் வழககிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் வழக்கிற்காகபொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல..

<u>2ம் எதிர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1ம் எதிரியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.